தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 65 | 4 Pages | 4.10.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 65 | 4 பக்கங்கள் | 4.10.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வே மெனல்**

**விளக்கம்:**

குற்றமானதைஉள்ளத்தால்எண்ணுவதும்குற்றமே,அதானால் பிறன் பொருளை அவன் அறியாதப் வகையால் வஞ்சித்துக்கொள்வோம் என்று எண்ணாதிருக்க வேண்டும்.

# கதர் கிராமப் பொருட்களை அதிகளவில் வாங்குங்கள்: முதல்வர் வேண்டுகோள்

சென்னை, அக். 4

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காந்தி பிறந்த நாளையொட்டி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டிலுள்ள கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் பொருளாதார மேம்பாட்டினையும், அவர்களது நலன்களையும் கருத்திலே கொண்டு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது "அகிம்சை ஆயுதமாக" அண்ணல் காந்தியடிகளால் முன்மொழியப்பட்ட கதர், கைத்தறி ஆடைகளை தயாரிப்பது, அதையே அணிவது என்பதன் அடிப்படையில், கை ராட்டைகளை கொண்டு நூல் நூற்பதிலும், கதர் ரகங்களை நெசவு செய்வதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

கிராமப்புறங்களில் உள்ள கதர் நெசவாளர்களால் நவீன சூழலுக்கு ஏற்ப புத்தம்புது வடிவமைப்புகளில் கண்ணைக் கவரும் வண்ணத்தில் நெசவு நெய்யப்படும் கதராடைகள் மற்றும் கிராமப் புற கை வினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் பலதரப்பட்ட கிராமப் பொருட்களை தமிழ்நாட்டிலுள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்திட தமிழ்நாடு அரசு தூண்டுகோலாய் துணை நின்று அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.



பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் கதர் பருத்தி, கதர் பாலியஸ்டர் மற்றும் கதர் பட்டு ரகங்களை வழங்க வேண்டும் என்ற நோக்கில் ஆண்டு முழுவதும் 30 சதவீதம் விற்பனைத் தள்ளுபடியை அரசு அனுமதித்துள்ளதால், ஆண்டு முழுவதும் தள்ளுபடி விலையில் அவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அண்ணல் காந்தியடிகளின் 156வது பிறந்த நன்னாளையொட்டி, கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கதர் நூற்போர் மற்றும் நெய்வோர் அனைவருடைய வாழ்க்கையிலும் உயர்வு ஏற்படுத்தி, கதர்த் தொழிலுக்குக் கை கொடுக்கும் வகையில், தேச நலன் காக்கும் கதர் மற்றும் கிராமப் பொருட்களை அதிகளவில் வாங்கி நாட்டிற்கு வலிமை சேர்த்திட வேண்டும் என மாணவ, மாணவிகள், இளைஞர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உயிரியல் பூங்காவில் புதுவகை வைரஸ் பாதிப்பு.. 47 புலிகள் பலி



வியட்நாம், அக்.4

தெற்கு வியட்நாமில் உள்ள உயிரியல் பூங்காவில் நாற்பத்தேழு புலிகள், மூன்று சிங்கங்கள் மற்றும் ஒரு சிறுத்தை ஆகியவை எச்5என்1 பறவைக் காய்ச்சல் தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லாங் அன் மாகாணத்தில் உள்ள தனியார் மை குயுஹ்ன் சஃபாரி பூங்கா மற்றும் ஹோ சி மின் நகருக்கு அருகில் உள்ள டோங் நாயில் உள்ள வியோன் சோய் மிருகக்காட்சிசாலையில் கடந்த ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் இந்த மரணங்கள் நிகழ்ந்ததாக அதிகாரப்பூர்வ வியட்நாம் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, விலங்கு சுகாதார நோயறிதலுக்கான தேசிய மையத்தின் சோதனை முடிவுகளின்படி, விலங்குகள் "H5N1" வகை A வைரஸால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளன.

இருப்பினும், விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த எந்த மிருகக்காட்சிசாலை ஊழியர்களுக்கும் சுவாச அறிகுறிகள் எதுவும் இல்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு 2022 முதல், எச்5என்1 உள்ளிட்ட இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களால் பாலூட்டிகளிடையே பாதிப்பு அதிகரித்து வருவதாகக் கூறுகிறது.

எச்5என்1 நோய்த்தொற்றுகள் மனிதர்களுக்கு லேசானது முதல் கடுமையானது வரை இருக்கலாம், மேலும் சில சமயங்களில் மரணம் கூட ஏற்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

## டாடா ஆலையில் தீ விபத்து.. மீண்டும் சீனா பக்கம் போகும் ஆப்பிள்..?

சீனா, அக். 4

தமிழ்நாட்டின் ஒசூரில் உள்ள டாடா உற்பத்தி ஆலையில், சில தினங்களுக்கு முன் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து, அந்த ஆலையில் உற்பத்தி பணிகள் காலவரையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையில் வைத்து தான் ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் மாடல்கள் அசெம்பில் செய்யப்பட இருந்தன.

இதன் காரணமாக ஆப்பிள் நிறுவனம் சம்பந்தப்பட்ட பாகங்களை சீனா அல்லது வேறு நாடுகளில் செயல்பட்டு வரும் ஆலையில் இருந்து ஏற்பாடு செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தீ விபத்து ஏற்பட்ட ஆலையில் டாடா நிறுவனம் ஐபோனின் பேக் பேனல்கள் மற்றும் இதர பாகங்களை உற்பத்தி செய்து ஃபாக்ஸ்கான் நிறுவனத்திற்கு வழங்க இருந்தது.

ஹாங்காங்கை சேர்ந்த கவுண்டர்பாயிண்ட் ரிசர்ச் நிறுவனம் தனியார் செய்தி நிறுவனத்திடம் கூறும் போது, "அக்டோபர் இறுதியில் இருந்து நவம்பர் மாத தொடக்கம் வரையிலான காலக்கட்டம் இந்திய பண்டிகைக் காலம் என்பதால் ஐபோன் 14 மற்றும் 15 மாடல்களின் உள்ளூர் விற்பனை 1.5 மில்லியன் யூனிட்கள் என்று கணிக்கப்படுகிறது. எனினும், ஆப்பிள் இந்த தேவையில் 15 சதவீதத்தை பூர்த்தி செய்யவே போராடுகிறது," என தெரிவித்துள்ளது.

உள்ளூர்விற்பனையைத்தவிர,இந்தியாவின்மிகப்பெரியநிறுவனங்களில் ஒன்றான டாடா, நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் ஐபோன்களை ஏற்றுமதி செய்கிறது. மேலும் சில பகுதிகள் மொத்தமாக $250 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ளவை என கூறப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து டாடா நிறுவனம் இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை.

## முதல் நாள் தாக்குதல் வெறும் டீசர் தான்.. இஸ்ரேலை நேரடியாக மிரட்டிய ஈரான்

பாலஸ்தீன், அக். 4

பாலஸ்தீனம் மற்றும் லெபனானில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு மத்தியில் ஈரான் ராணுவம் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. நேற்றிரவு முதல் 200க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்ளிட்ட பகுதிகளில் ஈரான் ஏவியுள்ளது.

அவற்றை இஸ்ரேல் ராணுவம் தாக்கி அழித்து வரும் சூழலில் மக்கள் பாதுகாப்பு பங்கர்களில் தஞ்சம் அடைத்துள்ளனர். இந்த நிலையில், இஸ்ரேல் மீதான தாக்குதல் குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியான் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "நியாயமான உரிமைகளின் அடிப்படையிலும், ஈரான் மற்றும் பிராந்தியத்திற்கான அமைதி மற்றும் பாதுகாப்பின் நோக்கத்துடன், சியோனிச ஆட்சியின் ஆக்கிரமிப்புக்கு ஒரு தீர்க்கமான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை ஈரானின் நலன்களையும் குடிமக்களையும் பாதுகாக்கும் வகையில் தான் இருந்தது."

"ஈரான் போர்க்குணமிக்க நாடு அல்ல, ஆனால் அது எந்த அச்சுறுத்தலுக்கும் எதிராக உறுதியாக நிற்கிறது என்பதை நேதன்யாகுவுக்கு தெரியப்படுத்துங்கள். இது எங்களது சக்தியின் ஒரு பகுதி மட்டும்தான். ஈரானுடன் மோதலில் ஈடுபட வேண்டாம்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## காந்தி சிலைக்கு முதல்வர், கவர்னர் மரியாதை



சென்னை, அக். 4

மகாத்மா காந்தியின் 156வது பிறந்த நாளை முன்னிட்டு கிண்டி காந்தி மண்டபத்தில் உள்ள காந்தி சிலை மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது.

கவர்னர் ஆர்.என்.ரவி காந்தி மண்டபம் சென்று அங்குள்ள சிலைக்கு மாலை அணிவித்தும் காந்தியின் உருவ படத்துக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அவருடன் மத்திய மந்திரி எல்.முருகன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் காந்தி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழக அரசின் சார்பில் எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள காந்தியின் சிலை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. சிலைக்கு அருகே காந்தியின் உருவப்படமும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று காந்தியின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினாார்.

அவருடன்துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், ராஜ கண்ணப்பன்,

மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, தலைமைச் செயலாளர் முருகானந்தம், தமிழ்ச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் பரந்தாமன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, முன்னாள் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன் மற்றும் செய்தித் துறை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று காந்தி படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியிலும் பங்கேற்றனர்.

## திருக்குறள் முற்றோதல் செய்யும் போட்டி மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம்

மதுரை, அக். 4

மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கும் உலகப்பொதுமறையாம் திருக்குறளின் சீரிய கருத்துகளை இளம் தலைமுறையினரின் மனதில் பதியச் செய்து அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் 1330 குறட்பாக்களையும் மனனம் செய்து முழுமையாக ஒப்பிக்கும் திறன் கொண்ட பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித்துறையால் குறள் பரிசாக ரூ:15,000/ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான குறள்பரிசு வழங்கும் பொருட்டு தகுதியான மாணவ, மாணவியரிடமிருந்து விண் ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் மாணவர்களுக்குப் பரிசுத்தொகையாக ரூ.15,000/ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கப்பெறும். விண்ணப்பங்களை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்திலுள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ / .... என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை 25.10.2024க்குள் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம், உலகத் தமிழ்ச் சங்க வளாகம், மருத்துவர் தங்கராசு சாலை, அரசு சட்டக் கல்லூரி அருகில், மதுரை 20 என்ற முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமாகவோ / . என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் என்று மாவட்ட கலெக்டர் மா.செள.சங்கீதா, தெரிவித்துள்ளார்.



டிஜிட்டல் சவுத் ட்ரஸ்ட் சார்பில் திருப்பூர் கோவை மாவட்டங்களில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மக்களுக்கு செய்யக்கூடிய சேவைக்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சுதாகர லட்சுமண ராஜன் டிஜிட்டல் சவுத் ட்ரஸ்ட் நிறுவனர் அவர்கள் விஜயகுமார் டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் தமிழ்நாடு தலைமைச் செயலாளர் பூங்கொடி ராஜன் முதன்மை தலைமை அலுவலர் கொங்கு மண்டலம் டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் பாலசுப்பிரமணியம் திருப்பூர் மாவட்ட தலைவர் கோபிநாத் திருப்பூர் மாவட்ட துணைத் திரு மாரிசாமி ஸ்ரீதர் ஈரோடு மாவட்ட தலைவர் ரூபேஷ் கோவை மாவட்ட தலைவர் கொங்கு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



குன்னூரில் கடந்த 30 ஆம் தேதி பெய்த கன மழையின் காரணமாக ஆப்பிள் பி ரோடு ஜாய்ஸ் பில்டரங் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் பொதுமக்கள் பயன்படுத்தும் சாலை முழுவதும் மூடிய நிலையில் நான்கு நாட்களாகியும் குன்னூர் நகராட்சி நிர்வாகம் எந்த வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காததால் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியுள்ளதால் சாலையை சீர் செய்து தர அப்பகுதி மக்கள் குன்னூர் நகராட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்துள்ளனர்.



உச்சநீதிமன்றத்தில் அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு சீராய்வு மனுவை திரும்ப பெற வலியுறுத்தி மதுரை கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது இதில் மாநிலத் தலைவர் மின்னல் வரதன் தலைமை தாங்கினார் முன்னிலை முத்துமாணிக்கம் மாநிலத் துணைத் தலைவரும் மாநில பேச்சாளர் பாண்டீஸ்வரன் மற்றும் மணிமாறன் தமிழ் மீனவர் கூட்டமைப்பு ரஜினி அவர்களும் புரட்சி புலிகள் கட்சி தலைவர்திலிபன் அவர்களும் கலந்து கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் கட்சியின் மாநில மாவட்ட ஒன்றிய அமைப்பு சார்ந்த பல்வேறு நபர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் முடிவில் நன்றியுரை சிராஜுதீன் நன்றியுடன் முடித்து வைத்தார்

# முதல்ல சாலையை சரி பண்ணுங்க, அப்புறம் சுங்க வரி வாங்கலாம்.. எம்.பி. தயாநிதி மாறன் காட்டம்

சென்னை, அக். 4

மத்திய சென்னை தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன், மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரிக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில்,

சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் (NH 48) நீண்ட நாட்களாக நடக்கும் விரிவாக்காப் பணிகளாலும், மிக சோமான நிலையில் குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது.






சாலை மோசமாக உள்ளதால் சுங்கக் கட்டணம் வசூலிப்பது நியாயமற்றது. சாலையை முறையாக பராமரித்த பிறகே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். சாலையை சீரமைக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ்நாட்டில் முதல்முறையாக மின்சார படகு சவாரி சுற்றுலா பயணிகள் வரவேற்பு

ஊட்டி, அக். 4

தமிழ்நாட்டில் முதல்முறையாக உதகை படகு இல்லத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "டோனட் போட்" எனப்படும் மின்சார படகு சவாரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மின்சார படகு சவாரி சுற்றுலா பயணிகள் இடையே அதிக வரவேற்பை பெற்றுள்ளது.

சத்தமே இல்லாமல், சுடச்சுட டீயுடன், ஊட்டி வர்க்கி,கட்லெட்,சமோசா என உணவுகளை சாப்பிட்டவாறு படகில் பயணிப்பது மகிழ்ச்சி அளிப்பதாக சுற்றுலா பயணிகள் உற்சாகத்துடன் தெரிவிக்கின்றனர்.



20 நிமிடம் பயணம் செய்ய 5 நபர்களுக்கு ரூ.1,200 கட்டணமாக வசூல் செய்யப்படுகிறது.

# வாணியம்பாடி அருகே மூதாட்டி அடித்துக்கொலை: போலீசார் விசாரணை

ஆலங்காயம், அக். 4

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த ராஜாபாளையம் பகுதியை சேர்ந்தவர் விஸ்வநாத் ராவ், முன்னாள் ராணுவ வீரர்.

இவரது மனைவி சந்திராபாய் (வயது 75). தம்பதியினருக்கு ரமேஷ் ராவ், சீனிவாச ராவ் என்ற மகன்களும், லட்சுமிபாய் என்ற மகளும் உள்ளனர். இவர்களுக்கு திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் விஸ்வநாத்ராவ் கடந்த 2016ம் ஆண்டு இறந்துவிட்டார். இதையடுத்து சந்திராபாய், மகள் லட்சுமி பாய் கட்டிய வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் லட்சுமி பாய் வழக்கம் போல் தனது தாய் சந்திராபாய்க்கு இன்று காலை 7 மணி அளவில் போன் செய்தார்.

அப்போது அவர் செல்போனை எடுக்கவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த லட்சுமிபாய் உடனடியாக, அக்கம் பக்கத்தில் உள்ள உறவினர்கள் மற்றும் அண்ணன் ரமேஷ் ராவ் ஆகியோருக்கு தகவல் தெரிவித்தார். அதன்படி ரமேஷ் ராவ் மற்றும் உறவினர்கள் உடனடியாக சென்று பார்த்தனர். அப்போது சந்திராபாய் தலையில் பலத்த காயத்துடன் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். சுவற்றில் ரத்த காயங்கள் இருந்தது. அவரது ஆடைகளும் கலைந்து கிடந்தது.

இது குறித்து அந்த பகுதி மக்கள் உடனடியாக வாணியம்பாடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.அதன்பேரில்மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்ரேயா குப்தா, வாணியம்பாடி துணை போலீஸ் சூப்பிரண்டு விஜயகுமார், இன்ஸ்பெக்டர்கள் ஜெய்கீர்த்தி, மங்கையர்கரசி, பேபி மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டன. வேலூர் மற்றும் திருவண்ணாமலையில் இருந்து 2 மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. மேலும் இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

போலீசார் நடத்திய முதல் கட்ட விசாரணை குறித்து அவர்கள் கூறியதாவது:

மூதாட்டி தனியாக வசித்து வந்ததை நோட்டமிட்ட மர்மகும்பல் திட்டமிட்டு, மூதாட்டியின் தலையை சுவற்றில் மோதி கொலை செய்துள்ளனர். இறந்தகிடந்த சந்திராபாயின் பின்பக்க தலையில் ரத்தக்காயம் இருப்பதோடு, வீட்டின் சுவற்றில் ரத்தக்கரைகளும் படிந்துள்ளது. இதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட பின்பே கொலைக்கான காரணம் தெரியவரும். விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# செல்வப்பெருந்தகை தலைமையில் நடந்த காங்கிரஸ் பாத யாத்திரைக்கு போலீஸ் அனுமதி மறுப்பு வாக்குவாதம்

சென்னை, அக். 4

காந்தி பிறந்த நாளான இன்று வெறுப்பு அரசியலை கண்டித்தும் ராகுல் காந்தியை விமர்சிப்பதை கண்டித்தும் காங்கிரஸ் சார்பில் தமிழ்நாடு முழுவதும் இன்று பாத யாத்திரை நடத்தப்படும் என்று காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்து இருந்தார்.

சென்னையில் ஜிம்கானா கிளப் காமராஜர் சிலை முன்பு இருந்து செல்வப்பெருந்தகை தலைமையில் பாத யாத்திரை செல்ல முடிவு செய்தனர்.

அதன்படி இன்று காலை 7 மணியில் இருந்து அந்த பகுதியில் காங்கிரஸ் தொண்டர்கள்திரண்டனர். அப்போது அங்கு வந்த போலீசார், அண்ணா சாலை வழியாக பாத யாத்திரை செல்ல அனுமதி இல்லை என்றனர்.

இதனால் காங்கிரஸ் தொண்டர்கள் இடையே சலசலப்பு ஏற்பட்டது. சிறிது நேரத்தில் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை, எம்.பி.க்கள் விஷ்ணு பிரசாத், சுதா, ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் அங்கு வந்தனர்.



அவர்களிடம் போலீஸ் அதிகாரிகள் அனுமதி இல்லை என்றும் அதற்கு பதிலாக ரம்டா ஓட்டல் அருகே சென்று அங்கிருந்து புறப்படும்படியும் தெரிவித்தனர்.

இதை ஏற்க காங்கிரசார் மறுத்தனர். இதனால் காங்கிரசாருக்கும் போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. சுமார் 2 மணி நேரம் அந்த பகுதி முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது.

போலீஸ் அனுமதி மறுத்தால் மறியலில் ஈடுபடவும் காங்கிரசார் தயாரானார்கள். அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான போலீசார் குவிக்கப்பட்டனர்.

கடைசியில் ஒரு வழியாக மூன்று மூன்று பேராக செல்ல அனுமதித்தனர். 9.30 மணியளவில் பாத யாத்திரை தொடங்கியது. அங்கிருந்து மே தின பூங்கா, சிந்தாதிரிப்பேட்டை, ரமடா ஓட்டல், புதுப்பேட்டை லான்ஸ் கார்டன் வழியாக எழும்பூர் அருங்காட்சியகம் அருகே நிறைவடைந்தது.

பாத யாத்திரையில் மாநில துணை தலைவர் சொர்ணா சேதுராமன், பொதுச்செயலாளர் தளபதி பாஸ்கர், எஸ்.ஏ.வாசு, அகரம் கோபி, மாவட்டத் தலைவர்கள் எம்.எஸ்.திரவியம், சிவராஜ சேகர், டில்லி பாபு, முத்தழகன், அடையார் துரை மற்றும் பி.வி.தமிழ் செல்வன், திருவான்மியூர் மனோகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அலை கடலென திரண்ட தொண்டர்கள்.. பிரமாண்டமாக தொடங்கிய மது ஒழிப்பு மாநாடு

உளுந்தூர்பேட்டை, அக். 4

தமிழ்நாடு உள்பட தேசிய அளவில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும், தேசிய மதுவிலக்கு சட்டம் இயற்ற வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்கம் சார்பில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மகளிர் மாநாடு கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் நடைபெற்றது.

இதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. தலைமை தாங்கி, மாநாட்டை தொடங்கி வைத்தார்.

மகளிர் விடுதலை இயக்கத்தின் மாநில துணை செயலாளர்கள் செஞ்சோலை, சிற்றரசி, மங்கையற்கரசி, அமுதா பொற்கொடி உள்பட பலர் முன்னிலை வகிக்கின்றனர். மகளிர் விடுதலை இயக்கத்தின் மாநில செயலாளர் நற்சோனை வரவேற்று பேசுகிறார்.




தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தி.மு.க. செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், அய்யா வைகுண்டர் இயக்கத்தின் தலைவர் பால.பிரஜாபதி அடிகளார், பொதுச்செயலாளர்கள் சிந்தனை செல்வன் எம்.எல்.ஏ., துரை.ரவிக்குமார் எம்.பி. ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க துணை தலைவர் வாசுகி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச்செயலாளர் ஆனி ராஜா, காங்கிரஸ் எம்.பி.சுதா, ம.தி.மு.க. துணைபொதுச்செயலாளர் ரொஹையா ஷேக் முகமது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலசெயலாளர் பாத்திமா முசபர், மனித நேய மக்கள் கட்சி மகளிர் அணி பொருளாளர் ஷான் ராணி ஆலிமா, தமிழக வாழ்வுரிமை கட்சியின் மாநில செயலாளர் முத்துலட்சுமி வீரப்பன் ஆகியோர் கருத்துரை ஆற்றுகின்றனர். முடிவில் மகளிர் விடுதலை இயக்கத்தின் மாநில பொருளாளர் மல்லிகையரசி நன்றி கூறுகிறார்.

மாநாட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்க தலைமையிடத்து பொறுப்பாளர்கள், மாநில பொறுப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் மகளிரணி நிர்வாகிகள், தொண்டர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு உள்ளனர்.

இதையொட்டி பிரமாண்டமான முறையில் மாநாடு முகப்புகள், பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பல்வேறு மாவட்டங்களில் இருந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் நேற்று முதலே உளுந்தூர்பேட்டைக்கு வரத்தொடங்கி உள்ளனர். இன்று மதியம் ஏராளமான தொண்டர்கள் குவிந்தனர்.

தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்தக் கோரி விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்தும் இந்த மாநாடு பொதுமக்கள் மட்டுமின்றி சக கட்சியினரிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. மாநாட்டையொட்டி கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் ஆகிய 3 மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# காஞ்சிபுரம் அருகே ஓரினச்சேர்க்கையில் 5 வயது சிறுவனை அடித்து கொன்ற அரசு அதிகாரி

காஞ்சிபுரம், அக். 4

காஞ்சிபுரம், கருக்குப் பேட்டையை சேர்ந்தவர் ராஜேஷ்(வயது34). இவர் காஞ்சிபுரம் நில அளவை பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். மேலும் பரந்தூர் விமான நிலைய திட்டத்திலும் நில அளவையில் பணியாற்றினார்.

இவரது மனைவி கருத்து வேறுபாட்டால் பிரிந்து சென்றுவிட்டதாக தெரிகிறது. இதனால் ராஜேஷ் தனியாக தங்கி பணிக்கு சென்று வந்தார்.

அதே பகுதியில் கணவரை பிரிந்து வாழ்ந்து வந்த இளம்பெண் ஒருவர் தனது தாயுடன் தள்ளுவண்டியில் டிபன்படை வைத்து உள்ளார்.

கடைக்கு அடிக்கடி சென்று வரும்போது இளம் பெண்ணுடன் ராஜேசுக்கு பழக்கம் ஏற்பட்டது.

அப்போது 4ம் வகுப்பு படித்து வரும் இளம் பெண்ணின் 9 வயது மகள், மற்றும் 1ம் வகுப்பு படித்து வந்த 5 வயது மகன் குகன் ஆகியோருடனும்ராஜேஷ் நெருக்கமானார்.

இளம்பெண்ணின் ஏழ்மையை தெரிந்து கொண்ட ராஜேஷ் தனக்கு தெரிந்து அறக்கட்டளை மூலம் சிறுவனையும், சிறுமியையும் படிக்க வைப்பதாக தெரிவித்தார்.

இதனால் இளம் பெண்ணும் ராஜேசுடன் மிகவும் நெருக்கமானார். அவரது மகன், மகளுடன் ராஜேஷ் பழகுவதையும் தவறாக நினைக்கவில்லை.

இதனை சாதகமாக பயன்படுத்தி கொண்ட ராஜேஷ் சிறுவன் குகனை தனது வீட்டுக்கு அழைத்து சென்று செல்போனில் ஆபாச படங்களை காட்டி ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டார்.

மேலும் இதுபற்றி வெளியில் யாரிடமும் கூறக் கூடாது என்று மிரட்டினார். இதனால் சிறுவன் குகன் இதுபற்றி யாரிடமும் கூறாமல் இருந்தார்.



இந்த நிலையில் குகனுக்கு உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு மயக்கம் அடைந்தார். அவனை அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். டாக்டர்கள் பரிசோதித்த போது சிறுவன் குகன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதனால் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் அவன் தாக்கப்பட்டு இருப்பது தெரிந்தது.

இதுபற்றி விசாரித்த போதுதான் ராஜேஷ் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட போது மறுத்து சத்தமிட்டதால் சிறுவன் குகனை தாக்கியதும் பின்னர் அவனை வீட்டில் வந்து விட்டு சென்று இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து காஞ்சிபுரம் தாலுக்கா போலீசார் வழக்குப்பதிவு செய்து நிலஅளவையர் ராஜேசை கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் இளம் பெண்ணின் மகளுக்கும் ஆபாச படங்களை காட்டி பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்து வந்தது தெரிய வந்தது. இதுபற்றியும் போலீசார் தனியாக விசாரணை நடத்தி வருகிறார்கள். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மகாளய அமாவாசையை முன்னிட்டு திருச்செந்தூர் கடற்கரையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்த பொதுமக்கள்

திருச்செந்தூர், அக். 4

புரட்டாசி மாத மகாளய அமாவாசையை முன்னிட்டு இன்று ஏராளமானவர்கள் திருச்செந்தூர் கடலில் புனித நீராடி தங்கள் முன்னோர்களுக்குதர்ப்பணம் கொடுத்தனர்.

மாதம்தோறும் அமாவாசை திதி வரும் அந்த திதிகளில் இறந்து போன தங்கள் முன்னோர்களுக்குதர்ப்பணம் கொடுப்பது வழக்கம். இதில் சிலர் தை மாதம் வரும் அமாவாசை, ஆடி மாத அமாவாசைநாட்களில்இறந்து போன தங்கள் முன்னோர்களுக்குதர்ப்பணம் கொடுப்பார்கள்.



இந்த நாட்களில் வரும் அமாவாசைக்கு திதி கொடுக்காதவர்கள் புரட்டாசி மாதம் வரும் மகாளய அமாவாசை நாளில் தங்கள் முன்னோர்களுக்குதர்ப்பணம் கொடுப்பார்கள். அவ்வாறு செய்தால் ஒரு வருட அமாவாசையில் திதி கொடுத்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

மகாளய அமாவாசையில் இறந்து போன தங்கள் முன்னோர்கள் தங்கள் வீடுகளுக்கு வருவார்கள். அவ்வாறு வரும் அவர்களை நினைத்து விரதம் மேற்கொண்டு கடல், ஆறு ஆகிய பகுதிகளில் நீராடி எள்ளும், தண்ணீரும் கொடுத்து தர்ப்பணம் செய்தால் நம் வீட்டிற்கு வந்த மூதாதையர்கள் அகம் மகிழ்ந்து நம்மை வாழ்த்திப் செல்வார்கள் என்பது ஐதீகம்.

அதேபோல் விரதம் மேற்கொள்பவர்கள் ஆண்கள் மட்டுமே திதி கொடுக்க வேண்டும் என்பதும் ஐதீகம்.

# சொத்துவரி உயர்வை கண்டித்து 8ந்தேதி அ.தி.மு.க. மனித சங்கிலி போராட்டம் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, அக். 4

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் அ.தி.மு.க., தி.மு.க. ஆட்சியில் நடைபெறும் பல்வேறு ஊழல்கள் மற்றும் முறைகேடுகளை அவ்வப்போது நாட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டி வருவதோடு, களத்தில் நின்று போராடி வருகிறது.

தமிழக அரசின் 40 மாத ஆட்சியில் மூன்று முறை மின்கட்டண உயர்வுடன், இனி ஆண்டுதோறும் மின் கட்டணம் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு. பத்திரப்பதிவு கட்டணம் பல மடங்கு உயர்வு. பால் பொருட்கள் விலை பலமுறை உயர்வு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு. கொலை, கொள்ளை என்று தொடர்ந்து சட்டம் ஒழுங்கு சீர்கேடு. பெண்கள், சிறுமியருக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள்.



போதைப் பொருட்களின் கேந்திரமாக மாறிய தமிழகம் ஏற்கெனவே உயர்த்தப்பட்ட 100 சதவீதம் மற்றும் 150 சதவீதம் சொத்து வரி உயர்வுடன் இனி ஆண்டுதோறும் 6 சதவீதம் சொத்து வரி கட்டணம் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு குடிநீர் மற்றும்கழிவுநீர்இணைப்புக்கட்டணங்கள்ஆண்டுதோறும் உயர்த்தப்படும் நிலை போன்றவற்றால் தமிழக மக்களின் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக சீரழித்து வருகிறது.

"40 மாத காலமாக, மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதற்குக் காரணமான ஸ்டாலினின் தி.மு.க. அரசைக் கண்டித்தும்; மக்கள் நலன் கருதி, உயர்த்தப்பட்ட சொத்து வரியை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தியும்" அ.தி.மு.க. சார்பில், 8ந்தேதி (செவ்வாய் கிழமை) காலை 10.30 மணியளவில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகளுக்கு உட்பட்ட வட்டங்களிலும்; நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும், மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெறும்.

ஸ்டாலினின் தி.மு.க. அரசைக்கண்டித்தும், மக்கள் நலனை முன்வைத்தும் நடைபெற உள்ள இந்த மனித சங்கிலி போராட்டத்தில் விவசாயிகள், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மெரினாவில் 6ந்தேதி நடைபெறும் விமான சாகச நிகழ்ச்சிக்கு 8 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு



சென்னை, அக். 4

இந்திய விமானப் படையின் 92ம் ஆண்டு கொண்டாட்டத்தையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் வருகிற 6ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) விமான சாகச நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அன்று காலை 11 மணிக்கு தொடங்கி நடைபெறும் இந்த சாகச நிகழ்ச்சியை கண்டு களிப்பதற்காக மெரினா கடற்கரையில் லட்சக்கணக்கானோர்திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2003ம் ஆண்டு நடைபெற்ற விமான சாகச ஒத்திகையின் போது மெரினாவில் லட்சக்கணக்கானோர் திரண்டுள்ளனர். அதே போன்று வருகிற 6ந்தேதி நடைபெற உள்ள விமான சாகச நிகழ்ச்சியை காண்பதற்கும் ஏராளமான பொதுமக்கள்கூடுவார்கள் என்பதால் பலத்த பாதுகாப்புக்கு போலீசார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

அன்றைய தினம் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசாரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த உயர் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். காணும் பொங்கல் தினத்தில் மேற்கொள்வது போன்று மெரினா கடற்கரை பகுதி முழுவதும் போலீசார் தீவிரமாக கண்காணிக்க உள்ளனர்.

விமான சாகச நிகழ்ச்சியை கண்டு ரசிக்க வருபவர்கள் கடலில் இறங்கி குளிக்க வருகிற 6ந்தேதிதடைவிதிக்கப்பட உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் காலையில் இருந்தே மக்கள் மெரினாவில் கூடுவார்கள் என்பதால் அவர்களை ஒழுங்குபடுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மெரினா காமராஜர் சாலையில் அன்று காலையில் இருந்தே போக்குவரத்தை நிறுத்தி பொதுமக்களை மட்டும் அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. கூட்ட நெரிசலை பயன்படுத்தி பிக்பாக்கெட், செயின் பறிப்பு போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை பிடிக்கவும் போலீசார் ரகசியமாக கண்காணிக்க உள்ளனர்.

புத்தாண்டு மற்றும் காணும் பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபடுவது போல அன்றைய தினம் மெரினாவில் மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபடுவார்கள் என்பதால் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள உயர் போலீஸ் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

விமான சாகச நிகழ்ச்சியையொட்டி 3 நாட்கள் ஒத்திகை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்படி நேற்று முதல் நாள் ஒத்திகை நிகழ்ச்சி நடந்தது. இன்று 2வது நாளாகவும் ஒத்திகை நடத்தப்பட்டது. இதனை பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

வருகிற 4ந்தேதி கடைசி நாள் ஒத்திகை நடத்தப்படுகிறது. இதன் பின்னர் சாகச நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற உள்ளன.

# மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி டிஸ்சார்ஜ்



சென்னை, அக். 4

தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சட்டமன்ற தொகுதி வாரியாக சென்று பள்ளிக் கூடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் காஞ்சீபுரம், உத்தரமேரூர் பகுதியில் நேற்று பள்ளி கட்டிடங்கள், நூலகங்கள் குறித்து கேட்டறிந்து நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆய்வுகளை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய அமைச்சர் அன்பில் மகேஷுக்கு திடீரென வயிற்று வலி ஏற்பட்டது . இதனால் அமைந்தகரையில் உள்ள பில்ரோத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் அவரது உடல் நிலை சரியானது. இதைத் தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஷ் இன்று டிஸ்சார்ஜ் ஆவார் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

# பா.ம.க. 8ந்தேதி இலங்கை தூதரக முற்றுகை போராட்டம் அறிவிப்பு



சென்னை, அக். 4

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறையை கண்டித்து பா.மக. சார்பில் வருகிற 8ந்தேதி இலங்கை தூதரகத்தை முற்றுகை போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

தொடர்ந்து வங்க கடலில் மீன்பிடிக்க செல்லக் கூடியதமிழகமீனவர்களை இலங்கை படை தொடர்ந்து தாக்கி வருவதாலும், அவர்களுடை உடைமைகளை அதாவது வலைகளை சேதப்படுத்துவது, கைது செய்து சித்ரவதை செய்வது போன்ற அத்துமீறலில் ஈடுபட்டு வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மீன்பிடிக்கும் உரிமையை மதிக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மீனவர்களை இலங்கை கடற்பட்டையினர் மதிக்காமல் தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமையை பாதுகாக்கும் வகையில் பா.ம.க. சார்பில் மிகப்பெரிய முற்றுகை போராட்டம் நடத்தப்போவதாக தெரிவித்துள்ளது. இந்த போராட்டத்தில் பா.ம.க. நிர்வாகிகள் மற்றும் தமிழக மீனவ அமைப்புகளுக்கும் இலங்கை தூதரக முற்றுகை போராட்டத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'தமிழ்நாட்டில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன' : கவர்னர் ஆர்.என்.ரவி குற்றச்சாட்டு




சென்னை, அக். 4

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற கவர்னர் ஆர்.என்.ரவி, மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்தார். பின்னர் விழாவில் பேசிய அவர், சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்தும் பட்டியலின மக்களுக்கு எதிரான பாகுபாடு நீங்கவில்லை என்று தெரிவித்தார்.

தேசிய குற்ற ஆவணக் காப்பக புள்ளி விவரங்களின்படி, கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் சமூகநீதி பேசுகிறார்களே தவிர நடைமுறையில் பட்டியலின மக்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை என்று குற்றம் சாட்டிய அவர், கள்ளக்குறிச்சி விஷ சாராய உயிரிழப்புகள், குடிநீர் தொட்டியில் கழிவுகள் கலப்பது உள்ளிட்ட பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்களைக் கண்டு வெட்கப்படுவதாக தெரிவித்தார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் மாற்றுத்திறனாளி பக்தர்களுக்கு வசதியாக சறுக்குப்பாதை

ஸ்ரீவில்லிபுத்தூர், அக். 4

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் 108 வைணவ திவ்ய தேசங்களில் முக்கிய தலங்களில் ஒன்றான ஆண்டாள் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் கோயில் நிர்வாகத்தின்சார்பில்பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். அந்த வகையில், மாற்றுத்திறனாளி பக்தர்கள் வந்து செல்ல கோவிலில் மூன்று சக்கர நாற்காலிகள் வைக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் குறிப்பிட்ட சில இடங்களில் அதை பயன்படுத்தி கோயிலுக்குள் செல்வதில் சிரமம் உள்ளது. எனவே மாற்றுத்திறனாளி பக்தர்கள் எளிதாக சாமி தரிசனம் செய்யும் வகையில் ஆண்டாள் கோவில் வளாகத்தில் பல்வேறு இடங்களில் ரூ.5.50 லட்சம் செலவில் சறுக்குப் பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்கான பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆண்டாள் கோயில் கொடி மரம் அருகே, நந்தவனம் மற்றும் பெரியாழ்வார் சன்னதி, சக்கரத்தாழ்வார் சன்னதி உள்பட ஏழு இடங்களில் மாற்றத்திறனாளிகள் செல்லும் சறுக்குப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. சறுக்குப் பாதை பணிகள் முடிவடைந்தவுடன் மாற்றுத்திறனாளிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# அ.தி.மு.க.வுக்கு எடப்பாடி பழனிசாமி முடிவுரை எழுதிவிடுவார் டி.டி.வி.தினகரன் விமர்சனம்



சென்னை, அக். 4

சென்னையில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர்கூறியதாவது;

"அ.தி.மு.க. தொண்டர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிக் கொண்டு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டு இருந்தார்கள் என்றால், 2026 சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.க.வுக்கு எடப்பாடி பழனிசாமி முடிவுரை எழுதிவிடுவார்.

எடப்பாடி பழனிசாமி தி.மு.க.வுடன் கள்ளக்கூட்டணி வைத்துக்கொண்டு, நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே வேட்பாளரை நிறுத்துகிறார். தி.மு.க.வுக்கு எதிராக முன்னாள் முதல்அமைச்சர் எம்.ஜி.ஆர். கண்டுபிடித்த வெற்றிச் சின்னமான இரட்டை இலை இன்று தி.மு.க.வின் வெற்றிக்கு மறைமுகமாக பயன்படுவது தான் வருத்தமளிக்கிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திமுக ஆட்சியில் பட்டியலின மக்களை கிள்ளுக்கீரையாக நடத்தும் அவலநிலை: எடப்பாடி பழனிசாமி கண்டனம்




சென்னை, அக். 4

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

சமூக நீதி என்று பேசிக்கொண்டே சமூக அநீதியை இழைத்திடும் மு.க.ஸ்டாலினின் திமுக ஆட்சியின் அலங்கோலங்கள் நாள்தோறும் தொடர்கதையாகி வருகிறது.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே உள்ள ஆனாங்கூர் பஞ்சாயத்து தலைவர்திருமதி. சங்கீதா, பழங்குடி இருளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவரை நாற்காலியில் அமர விடாமலும், கோப்புகளில் கையெழுத்துப் போட விடாமலும், சாதிய ரீதியாகத் திட்டி அவமரியாதை செய்வதாக பஞ்சாயத்து அதிகாரிகள் மற்றும் திமுகவினர் மீது குற்றம் சுமத்தி,

இன்று 2.10.24 காந்தி ஜெயந்தி நாளில் நடைபெற்ற கிராமச் சபை கூட்டத்தை புறக்கணிப்பதாக கூறி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமர்ந்து தர்ணா செய்து தனது எதிர்ப்பை காட்டியுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பட்டியலின மக்களை கிள்ளுக்கீரையாக நடத்தும் அவலநிலை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் திமுக ஆட்சியில் தொடர்கதையாகி வருவதற்கு எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இரண்டரை வயது குழந்தையின் தொண்டையில் சிக்கிய பிளாஸ்டிக் டப்பா... உயிரை காப்பாற்றிய டாக்டர்



திருமங்கலம், அக். 4

மதுரை மாவட்டம் திருமங்கலம் ரோஜா தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் ஹசீனாபானு. இவருக்கு இரண்டரை வயதில் ஆலியா என்ற பெண் குழந்தை உள்ளது. ஹசீனாபானு வேலைக்கு சென்றதால் குழந்தையை தனது தாய் மெகரசிபானுவிடம் விட்டுச்சென்றுள்ளார். வீட்டில் விளையாடி கொண்டிருந்த குழந்தை ஆலியாகீழேகிடந்தசிறிய பிளாஸ்டிக் தைல டப்பாவை எடுத்து வாயில் வைத்தது.

அப்போது டப்பா குழந்தையின் தொண்டையில் சிக்கிக்கொண்டது. இதனால் குழந்தைக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த மெகரசிபானு உடனடியாக குழந்தையை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

அங்கு பணியில் இருந்த டாக்டர் சிவகரன் மற்றும் செவிலியர்கள் குழந்தை ஆலியாவின் தொண்டையில் சிக்கிய பிளாஸ்டிக் டப்பாவை 15 நிமிடம் போராடி வெளியே எடுத்து உயிரை காப்பாற்றினர். டப்பாவை விழுங்கிய குழந்தையை காப்பாற்றிய அரசு மருத்துவமனை டாக்டர் மற்றும் செவிலியர்களுக்கு குடும்பத்தினர் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.

# கூடங்குளம் முதலாவது அணு உலையில் தொழில்நுட்பக் கோளாறு: மின் உற்பத்தி பாதிப்பு



நெல்லை, அக்.4

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வந்தது. மேலும் அங்கு 3 மற்றும் 4வது அணு உலைகள் கட்டுமான பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

நேற்று அதிகாலையில் முதலாவது அணு உலையில் திடீரென்று தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனால் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. முதலாவது அணு உலையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறை சரி செய்யும் பணியில் விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் ஓரிரு நாட்களில் தொழில்நுட்பக்கோளாறு சரி செய்யப்பட்டு முதலாவது அணு உலையில் மின்உற்பத்தி தொடங்கப்படும் என்று அணுமின் நிலைய வட்டாரம் தெரிவித்தது.தற்போது இரண்டாவது அணு உலையின் மூலம் 1,000 மெகாவாட் மின்உற்பத்திநடைபெற்று வருகிறது குறிப்பிடத்தக்கது.

# நீலகிரியில் இபாஸ் நடைமுறை தொடர உயர்நீதிமன்றம் உத்தரவு



ஊட்டி, அக். 4

சர்வதேச சுற்றுலா தலமான நீலகிரிக்கு ஒவ்வொரு ஆண்டும் 30 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர்.

ஒரே நேரத்தில் அளவுக்குஅதிகமாகசுற்றுலாப் பயணிகள் வருவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மேலும் தங்குமிடம், கழிப்பறை உள்பட பல்வேறு அடிப்படை விஷயங்களும் சுற்றுலாப் பயணிகளுக்கு கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

இதனால் சுற்றுலாப் பயணிகள் அனைத்து சுற்றுலா தலங்களையும் பார்க்க முடியாமல் அதிருப்தி அடைகின்றனர். உள்ளூர் மக்களும் சரியான நேரத்தில் வேலைக்கு செல்ல முடியாமல் அவதிப்படுகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு சென்னை உயர் நீதிமன்றம் நீலகிரியில் சுற்றுலாப் பயணிகள் வருகையில் கட்டுப்பாடுகளை கொண்டு வருவதற்காக முதல்கட்டமாக இபாஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இதன்படி கடந்த மே மாதம் 7ந்தேதி முதல் நீலகிரிக்குள் வரும் வாகனங்கள் இபாஸ் இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்பட்டன.

இதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டு உள்ளது. இதற்காக https:/;/epass.tnega.org என்ற பிரத்யேக இணைய தளம் வெளியிடப்பட்டு அதன்மூலம் இபாஸ் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

மேலும் கடந்த செப்டம்பர் 30ந்தேதிவரை இபாஸ் எடுத்து வரகால அவகாசம் நீட்டிக்கப்பட்டது. தொடர்ந்து தற்போது மறு அறிவிப்பு வரும்வரை நீலகிரியில் இபாஸ் நடைமுறை தொடர உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமிபவ்யா தண்ணீரு கூறுகையில், நீலகிரி மாவட்டத்தை பொருத்தவரை உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் மறுஅறிவிப்பு வரும்வரை இபாஸ் நடைமுறை தொடரும்.

இபாஸ் நடைமுறைப் படுத்தப்பட்டதில் இருந்து கடந்த 5 மாதங்களில் மட்டும் 2 3/4 லட்சம் வாகனங்களில் 13 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சென்னையில் திருப்பதி திருக்குடை ஊர்வலம்... பக்தர்கள் தீபாராதனை காட்டி வழிபாடு



சென்னை, அஜ், 4

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் புரட்டாசி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தின் போது, ஏழுமலையானின் கருட சேவைக்கு, தமிழக பக்தர்கள் தரப்பில் வெண் பட்டு திருக்குடைகளை காணிக்கையாக சமர்ப்பணம் செய்வது வழக்கம். இந்து தர்மார்த்த ஸமிதி சார்பில் இந்த திருக்குடைகள் ஒப்படைக்கப்படும்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான திருமலை திருப்பதி திருக்குடை ஊர்வலம் சென்னை பாரிமுனை பகுதியில் உள்ள சென்னகேசவ பெருமாள் கோவிலில் இருந்து தொடங்கியது. கோவிலில் திருக்குடைகளுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. அதைத்தொடர்ந்து கோவில் வளாகத்தில்அமைக்கப்பட்டிருந்த மேடையில் தொடக்க விழா நடைபெற்றது. திருக்குறுங்குடி ஜீயர் மடம், மடாதிபதி ஸ்ரீஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் சுவாமிகள் ஆசி வழங்கி ஊர்வலத்தை தொடங்கி வைத்தார்.

திருக்குடை ஊர்வலம், என்.எஸ்.சி. போஸ் சாலை, கோவிந்தப்ப நாயக்கன் தெரு சந்திப்பு, பைராகி மடம், வால்டாக்ஸ் சாலை வழியாக மாலை 5.30 மணியளவில் கவுனி தாண்டியது. பின்னர், யானைக்கவுனி பாலம், சூளை நெடுஞ்சாலை, ஏ.பி.ரோடு, வடமலையான் தெரு, தாணா தெரு, செல்லப்பா தெரு வழியாக இரவு அயனாவரம் காசி விசுவநாதர் கோயிலை சென்றடைகிறது. ஊர்வல பாதை முழுவதும் ஏராளமான பக்தர்கள் திருக்குடைகளை கண்டு தரிசனம் செய்தனர். தீபாராதனை காட்டி வழிபாடு செய்து, திருக்குடைகளை உற்சாகமாக வழியனுப்பி வைத்தனர்

இதையடுத்து, நாளை சென்னை அயனாவரம், வில்லிவாக்கம், திருமுல்லைவாயில், திருவள்ளூர் வரை திருக்குடைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அங்கிருந்து 7ம் தேதி திருமலையைச் சென்றடையும். பின்னர் கோவில் மாடவீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தேவஸ்தான அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும். இந்த ஆண்டு, இந்து தர்மார்த்த சமிதி, திருமலை திருப்பதி ஏழுமலையானுக்கு 11 அழகிய வெண்பட்டு திருக்குடைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

# செஞ்சியில் மாமன்னர் ராஜா தேசிங்குக்கு மணிமண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் : ஓ.பன்னீர்செல்வம்



சென்னை, அக். 4

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

செஞ்சிக் கோட்டை என்றவுடன் அனைவரின் நினைவிற்கும் வருவது மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்கள். "தெருக்கூத்து" அல்லது "பொய்க்கால் குதிரை" கலைகள் மூலம் மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்களின் வாழ்க்கை வரலாறு மக்களுக்கு எடுத்துக் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில்ஆண்குழந்தைகளுக்கு "தேசிங்கு என்ற பெயர் இன்றளவிலும் வைக்கப்படுகிறது.

மறைந்த செஞ்சி மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்கள், விடுதலை உணர்வை ஊட்டும் வகையில், "ஆறிலும் சாவு, நூறிலும் சாவு" என்பதற்கேற்ப, "அந்நியர்களுக்கு கப்பம் கட்டமாட்டேன்" எனக்கூறி உள்ளூர் இளவரசரை எதிர்த்துப் போராடி வீர மரணம் அடைந்தார். சுயமரியாதையின் மறுவுருவமாக விளங்கியவர் மாமன்னர் ராஜா தேசிங்கு. மாமன்னர் ராஜா தேசிங்கு இறந்த அன்றே அவருடைய மனைவி ராணிபாய் உடன்கட்டை ஏறி உயிர் நீத்ததாகவும், இதன் காரணமாக ராணிப்பேட்டை நகரம் உருவாகியதாகவும் வாவாற்று ஏடுகள் தெரிவிக்கின்றன.

இப்படிப்பட்ட மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட "ராஜா தேசிங்கு" என்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்ததை இந்த் தருணத்தில் நினைவு கூர விருப்புகிறேன். 0310 2024 அன்று மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்களின் 310வது நினைவு நாள் வருவதையொட்டி அவருக்கு எனது வீரவணக்கத்தினையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று நாயகள், செஞ்சி மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்களின் 310 வது நினைவு நாளையொட்டி, அவருக்கு செஞ்சியில் ஒரு மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ராஜாதேசிங் ராஜ்புக் பொந்தில் சேனாஅமைப்பினர்வைத்துள்ளனர்.

வீரதீரச் செயல் புரிந்தவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், சமுதாய மேம்பாட்டிற்காக பாடுபட்டவர்கள் போன்றவர்களின் பெருமைகளை எதிர்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில் அவர்களின் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியது ஒரு நல்லரசின் கடமையாகும்.

அந்த வகையில், அடக்குமுறையை எதிர்த்து போராடி தன்னுயிரைத் தியாகம் செய்த மாமன்னர் ராஜா தேசிங்கு அவர்களுக்கு செஞ்சியில் ஒரு மணிமண்டபத்தை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு முதல் அமைச்சர் அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின்சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மது ஒழிப்பு மாநாடு என்பது அரசியல் மோசடி மாநாடு: எச்.ராஜா



புதுக்கோட்டை, அக்.4

புதுக்கோட்டையில் தமிழக பாஜக பொறுப்பாளர் எச்.ராஜா செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

காந்தி ஜெயந்தி முன்னிட்டு எப்படியாவது தமிழகத்தில் குறிப்பாக பெண் வாக்காளர்களை கருத்தில் கொண்டு திசை திருப்பும் விதமாகவும் குற்றவாளிகளை காப்பாற்றும் விதமாகவும் ஒரு கட்சி இன்று மது ஒழிப்பு மாநாடு நடத்துகிறது. தமிழ்நாட்டில் ஆட்சியில் உள்ள திமுக அரசு 500 மதுபானகடைகளை மூடுவேன் என்று சொல்லிவிட்டு ஆயிரம் தனியார் கிளப்புக்கு அனுமதி அளித்துள்ளனர்.

இவ்வாறு மதுவை ஊக்குவிக்கும் திமுக அரசின் பிரதிநிதிகள் விசிக நடத்தும் மது ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள் என்றால் இது யாரை ஏமாற்றும் செயல். இது மது ஒழிப்பு மாநாடா? அல்லது மது உற்பத்தியாளர்கள் விற்பனையாளர்கள், மது பிரியர்கள் மாநாடா?.

கள்ளக்குறிச்சியில் 65 பேர் உயிரிழந்த சம்பவத்தில் வெட்கமே இல்லாமல் இந்த ஆண்டு 1,700 கோடி ரூபாய் மதுக்கடை மூலம் அதிக வருமானம் வந்துள்ளது என்பது திமுக கூறியிருப்பது வெக்கக்கேடான விஷயம். மதுக்கடைகளை திறந்தவர்கள்தான் மதுக்கடைகளை மூட வேண்டும். மது ஒழிப்பு மாநாடு என்பதுஅரசியல்மோசடி மாநாடு; மக்களை ஏமாற்றுகிற மாநாடு.

திமுக அரசு பொறுப்பேற்ற பின் அறநிலைத் துறைமூலம்புனரமைப்பு செய்யப்பட்ட கோவில் களை கள ஆய்வு செய்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். தமிழ்நாட்டில் நடைபெற்ற கோவில் புனரமைப்பு பணிகளில் பெரும்பாலும் ஊழல் நடந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.2 ஆயிரம் லஞ்சம் வாங்கிய பெண் கிராம நிர்வாக அலுவலர் கைது

தஞ்சை, அக். 4

தஞ்சையை அடுத்த கொல்லாங்கரை கிராமத்தில் வசித்து வந்தவர் கோவிந்தராஜ். இவருடைய மனைவி சுகந்தி. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கோவிந்தராஜ் இறந்து விட்டார். இதனால் தனது கணவர் பெயரில் உள்ள சொத்துகளை தனது பெயருக்கு மாற்றம் செய்ய சுகந்தி முயற்சி மேற்கொண்டார்.

இதற்காக கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு கொல்லாங்கரை கிராம நிர்வாக அலுவலர் வள்ளி என்பவரிடம் சுகந்தி விண்ணப்பம் செய்தார். இந்த விண்ணபம் தொடர்பாக சுகந்தியை பல நாட்களாக கிராம நிர்வாக அலுவலகத்திற்கு அலுவலர் வள்ளி வரவழைத்தார். ஆனால் பட்டா மாற்றம் செய்வதற்கான பணி மட்டும் கிடப்பிலேயே போட்டு இருந்தார்.

பின்னர் ரூ.3 ஆயிரம் லஞ்சம் கொடுத்தால் பட்டாவை மாற்றித்தருவதாக வள்ளி கூறினார். ஆனால்லஞ்சம்கொடுக்க சுகந்திக்கு விருப்பம் இல்லை. இதனால் அவர் தஞ்சை லஞ்ச ஒழிப்பு போலீசில் இதுகுறித்து புகார் அளித்தார். அதன் பேரில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு (பொறுப்பு) ராமச்சந்திரன் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் பத்மாவதி, சரவணன் மற்றும் போலீசார் அடங்கிய குழுவினர் கொல்லாங்கரை கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலகம் அருகே மறைந்திருந்தனர்.

அப்போது லஞ்ச ஒழிப்பு போலீசார் கூறிய அறிவுரையின்படி ரசாயன பவுடர் தடவிய ரூ.2 ஆயிரத்தை சுகந்தி எடுத்துச்சென்று கிராமநிர்வாக அலுவலர் வள்ளியிடம் கொடுத்துள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடியாக கிராம நிர்வாக அலுவலகத்திற்குள் நுழைந்து வள்ளியை கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர். பின்னர் கும்பகோணம் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வள்ளி ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# பூஜையுடன் தொடங்கியது "தளபதி 69" படப்பிடிப்பு



நடிகர் விஜய் நடிப்பில் கடந்த 5ம் தேதி வெளியாகி வெற்றி நடைபோட்டு வரும் படம் 'தி கோட்'. இப்படம் விஜய்யின் 68வது படமாகும். இப்படத்தை தொடர்ந்து, அவர்தனது 69வதுபடத்தில்நடிக்கஉள்ளார். இப்படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 69' என பெயரிடப்பட்டுள்ளது. இதுதான் நடிகர் விஜய்யின் கடைசி படமாகும். 'தளபதி 69' படத்தை எச்.வினோத் இயக்க உள்ளார். மேலும், இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படம் அடுத்தாண்டு அக்டோபர் மாதம் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இப்படத்தை பிரபல தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் நிறுவனம் தயாரிக்க உள்ளது. இந்த நிறுவனத்தின் முதல் தமிழ் படம் இதுவாகும். இந்த படத்தில் நடிகர் பாபி தியோல், மமிதா பைஜு, பூஜா ஹெக்டே, கவுதம் வாசுதேவ் மேனன், நடிகை பிரியாமணி, நடிகர் நரேன், நடிகர் பிரகாஷ் ராஜ் உள்ளிட்டோர் இணைந்துள்ளதை தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில், "தளபதி 69" படத்தின் பூஜை இன்று காலை நடைபெற்றது. "தளபதி 69" பட பூஜையில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை படக்குழுவினர் தற்போது வெளியிட்டுள்ளனர். இந்த பூஜையில் விஜய், பூஜா ஹெக்டே, இயக்குனர் ஹெச். வினோத், பாபி தியோல், மமிதா பைஜூ உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். நாளை இப்படத்தின் படப்பிடிப்பு பாடல் காட்சியுடன் துவங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

படத்திற்கான பூஜை இன்று நடைபெற்ற வேளையில் தனது கட்சியின் முதல் மாநில மாநாட்டுக்கான பந்தக்கால் நடும் விழாவையும் விஜய் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் திருமணம்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ரஷித் கானுக்கு நேற்று திருமணம் நடைபெற்றுள்ளது. இந்த திருமண விழாவில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் பலர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இது தொடர்பான வீடியோ மற்றும் படங்கள் வைரலாகி வருகின்றன.

ரஷித் கான் திருமணம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஓட்டலில் நடந்துள்ளது. ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி வீரரான முகமது நபி ஒரேயொரு கிங் கான் ஆன ரஷித் கானுக்கு திருமண வாழ்த்துக்கள். வாழ்நாள் முழுவதும் அன்பு, மகிழ்ச்சி நிறைந்திருக்க வாழ்த்துகள் என சமூக வலைத்தளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

26 வயதாகும் ரஷித் கான் ஐந்து டெஸ்ட், 105 ஒருநாள் மற்றும் 93 டி20 போட்டிகளில் விளையாடிள்ளார். டெஸ்ட் போட்டியில் 34 விக்கெட்டுகளும், ஒருநாள் போட்டியில் 190 விக்கெட்டுகளும், டி20 போட்டியில் 152 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார். 2015ம் ஆண்டு முதன்முறையாக ஜிம்பாப்வே அணிக்கெதிராக டி20 போட்டியின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் ஆனார்.

# நடிகை சமந்தா குறித்து சர்ச்சை கருத்து: தெலுங்கானா மந்திரிக்கு இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலி கண்டனம்



தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக வலம் வரும் சமந்தா. இவர் 2017ம் ஆண்டு தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவை காதலித்து இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர். பின்னர்ஒருசிலகாரணத்தால் விவாகரத்து பெற்று பிரிந்தார். கருத்து வேறுபாடு காரணமாக பிரிவதாக அவர்கள் அறிவித்தாலும், சரியான காரணத்தை வெளிப்படையாக கூறவில்லை. அதன் பிறகு நாக சைதன்யா தற்போது நடிகை சோபிதா துளிபாலா என்பவரை திருமணம் செய்ய இருக்கிறார். நிச்சயதார்த்தமும் சில மாதங்களுக்கு முன் நடந்து முடிந்தது.

இதற்கிடையே சமந்தா நாகசைதன்யா விவாகரத்துக்கு பாரதிய ராஷ்டிர சமிதி (பி.ஆர்.எஸ்) கட்சியின் செயல் நிர்வாக தலைவரும், முன்னாள் முதல்மந்திரி சந்திரசேகரராவ்வின் மகனுமான கே.தாரக ராமாராவ்தான் காரணம் என்று கூறி தெலுங்கானா மந்திரி கொண்டா சுரேகா சர்ச்சையை கிளப்பியுள்ளார்.

மந்திரி சுரேகாவின் இந்த சர்ச்கையான பேச்சிற்கு நடிகர் நானி, நாக சைதன்யா மற்றும் நாகார்ஜுனா உள்ளிட்டோர் தங்களின் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

இந்த சூழலில், தான் கூறிய கருத்துகளை திரும்ப பெறுவதாக மந்திரி சுரேகா தெரிவித்தார். மேலும் நடிகை சமந்தாவும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில் கொண்டா சுரேகா சமந்தா விட மன்னிப்பு கோரி பதிவு ஒன்றினையும் வெளியிட்டிருந்தார். மேலும் தெலுங்கானா காங்கிரஸ் மந்திரி கொண்டா சுரேகா மீது நடிகர் நாகார்ஜுனா அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் பிரபல இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலி தனது சமூக வலைதள பக்கத்தில், "எல்லைகளை மதிக்க வேண்டும். கண்ணியத்தை பராமரிக்க வேண்டும். பொது அதிகாரிகள் செய்யும்போது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் பொறுத்துக் கொள்ள முடியாதது" என்று பதிவிட்டு கொண்டா சுரேகாவின் சர்ச்சை பேச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# முதல்அமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் தொடக்கம்



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதல்அமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டு போட்டிகள் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் 24ந்தேதி வரை சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் நடைபெறுகிறது.

போட்டிக்கான தொடக்க விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறுகிறது. பாராஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற துளசிமதி, டிரிபிள் ஜம்ப் வீரர்பிரவீன்சித்ரவேல் ஆகியோர்தொடக்கவிழாவில் ஜோதியை ஏந்தி செல்கின்றனர். துணை முதல் அமைச்சர்உதயநிதி ஸ்டாலின்போட்டியை தொடங்கி வைக்கிறார்.

தடகளம், டென்னிஸ், பேட்மிண்டன், கபடி, சிலம்பம், பளுதூக்குதல், கால்பந்து, ஆக்கி, குத்துச்சண்டை, நீச்சல், கிரிக்கெட், கூடைப்பந்து, கைப்பந்து, கேரம், வாள்வீச்சு, செஸ், ஜிம்னாஸ்டிக்ஸ் உள்பட 36 வகையான விளையாட்டுகள் நடத்தப்படுகிறது. இந்த முறை காட்சி போட்டியாக இஸ்போர்ட்ஸ் இடம் பெறுகிறது.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து வீரர்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அணியினருடன் வரும் அலுவலர்களுக்கு டிஷர்ட் வழங்கப்படுகிறது. அத்துடன் அவர்களின் உணவு, தங்குமிடம் மற்றும் போக்குவரத்து செலவுகள் அவர்களின் சொந்த மாவட்டத்திலிருந்து கவனித்துக் கொள்ளப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளுக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.37 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் தனிநபர் பிரிவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 லட்சம், 2ம் பரிசாக ரூ.75 ஆயிரம், 3ம் பரிசாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். இந்த முறை 4வது இடத்தை பிடிப்பவருக்கு 3வது இடத்திற்குரிய அதே பரிசுத்தொகை வழங்கப்பட உள்ளது.

குழு போட்டியில் முதல் 3 இடங்களை பிடிப்பவர்களுக்கு முறையே தலா ரூ.75 ஆயிரம், ரூ.50, ஆயிரம், ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கப்படும். போட்டிகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் மூலம் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.